www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# SALEM DISTRICT

QL

காலாண்டுத் தேர்வு - 2024

வகுப்பு : 12

வணிகவியல்

மதிப்பெண்கள்: 90 காலம் : 3 மணி

பகுதி - அ

I. சரியான விடையை தேர்ந்தெடுத்து விடைக்குறிப்புடன் எழுதுக. (20 X 1 = 20)

1. மேலாண்மை என்பது ஒரு ____________.
அ) கலை ஆ) அறிவியல் இ) கலை மற்றும் அறிவியல் ஈ) கலை அல்லது அறிவியல்

2. அறிவியல் பூர்வ மேலாண்மை கோட்பாட்டை உருவாக்கி வளர்த்தவர் ________
அ) ஃபோயல் ஆ) டேலர் இ) மேயோ ஈ) ஜேக்கப்

3. பின்வருவனவற்றுள் எது முக்கிய பணி அல்ல?
அ) முடிவெடுத்தல் ஆ) திட்டமிடுதல் இ) ஒழுங்கமைத்தல் ஈ) பணியமர்த்துதல்

4. முக்கியமான சிக்கல்களைக் கண்டறிவதன் மூலம் வாய்ப்புகளையும், அச்சுறுத்தல்களையும் மேலாண்மை எச்சரிக்கையாக வைத்திருக்க ________ உதவுகிறது.
அ) முதுகலை வணிக நிர்வாகம் ஆ) விதிவிலக்கு மேலாண்மை
இ) முதுகலை வணிக மேலாண்மை ஈ) குறியிலக்கு மேலாண்மை

5. மூலதனச் சந்தை என்பது ________ க்கான ஒரு சந்தை ஆகும்.
அ) குறுகிய கால நிதி ஆ) நடுத்தர கால நிதி இ) நீண்டகால நிதி
ஈ) மேற்கூறிய அனைத்தும்

6. மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர் ________ ஆவர்.
அ) தனிநபர் ஆ) நிறுமங்கள் இ) நிதி நிறுவனங்கள்
ஈ) மேற்கூறிய அனைத்தும்

7. பணச்சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு ________
அ) வணிக வங்கி ஆ) இந்திய ரிசர்வ் வங்கி இ) பாரத ஸ்டேட் வங்கி ஈ) மைய வங்கி

8. நாட்டில் ________ பங்குச் சந்தைகள் உள்ளன.
அ) 21 ஆ) 24 இ) 20 ஈ) 25

9. தேசிய பங்குச் சந்தையில் புறத்தோற்றமற்ற பத்திர வர்த்தகம் தொடங்கிய ஆண்டு__ ஆகும்.
அ) ஜனவரி 1996 ஆ) ஜூன் 1998 இ) டிசம்பர் 1996 ஈ) டிசம்பர் 1998

10. விளம்பரம் என்பது ஒரு ____________ ஆட்சேர்ப்பு வளமாகும்.
அ) அக வளங்கள் ஆ) புற வளங்கள் இ) முகவர் ஈ) புறத்திறனீட்டல்

11. பொருத்தமற்ற விண்ணப்பதாரரை நீக்குவதற்கான செயல்முறை ____________ அழைக்கப்படுகிறது.
அ) தேர்வு ஆ) ஆட்சேர்ப்பு இ) நேர்காணல் ஈ) தூண்டுதல்

12. பணிவழியற்ற பயிற்சி எங்கு அளிக்கப்படுகிறது?
அ) வகுப்பறையில் ஆ) வேலையில்லா நாட்களில்
இ) தொழிற்சாலைக்கு வெளியே ஈ) விளையாட்டு மைதானத்தில்

13. உடனடிச் சந்தை எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது?
அ) பொருட்கள் ஆ) பரிவர்த்தனை இ) ஒழுங்குமுறை ஈ) காலம்

14. சந்தையில் உயர் நிலையில் இருப்பவர் யார்?
அ) வாடிக்கையாளர் ஆ) விற்பனையாளர் இ) மொத்த விற்பனையாளர் ஈ) சில்லறை விற்பனையாளர்

15. இணையத்திற்கு நுழைவு வாயில் என்பது ____________.
அ) போர்டல் ஆ) சிபியு இ) மோடம் ஈ) வெப்நராங்

16. நுகர்வோரியல் எனும் சொல் தோன்றிய ஆண்டு ____________
அ) 1960 ஆ) 1957 இ) 1954 ஈ) 1958

17. ஜான் எஃப் கென்னடி அவர்களின் கூற்றுப்படி பின்வருபவற்றில் நுகர்வோர் உரிமையில் இடம் பெறாதவை எது?
அ) பாதுகாப்பு உரிமை ஆ) தேர்ந்தெடுக்கும் உரிமை இ) நுகரும் உரிமை ஈ) தெரிவிக்கும் உரிமை

18. மாநில நுகர்வோர் பாதுகாப்பு சபையின் தலைவர் யார்?
அ) உயர் நீதிமன்றத்தின் நீதிபதி ஆ) முதலமைச்சர் இ) நிதி மந்திரி ஈ) இவையேதுமில்லை



M.JEEVA. M.A,B.Ed,M.Phil.,
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

19. ஒரு நிறுவனத்திற்குள் உள்ள காரணிகள் __________ சூழல் ஆகும்.
அ) அக சிந்தனையாளர் ஆ) புற நோக்கியான் இ) சக மனிதர்கள் ஈ) இவை அனைத்தும்

20. அறிவியல் பூர்வ மேலாண்மையின் கோட்பாடுகள் என்பது
1. அறிவியல் கட்டை விரல் விதி அல்ல 2. இணக்கம், சச்சரவின்மை
3. மனப்புரட்சி 4. இவை அனைத்தும்
அ) 1,2,3,4 - சரி ஆ) 2,3,4 - சரி இ) 4 மட்டும் சரி ஈ) 1,2,3,4 அனைத்தும் தவறு

பகுதி - ஆ

II. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. வினா எண் 30-க்கு கட்டாயம் விடையளிகவும். 7 X 2 = 14

21. மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக.
22. திட்டமிடுதலுக்கு பயன்படுத்தப்படும் பாரம்பரிய பழமொழி என்ன?
23. குறியிலக்கு மேலாண்மையின் குறிக்கோள்கள் என்ன?
24. மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர்கள் யார்?
25. மாற்றம் என்பதன் பொருள் யாது?
26. செபியின் இரண்டு நோக்கங்கள் விவரி.
27. நுண்ணறிவு பரிசோதனை என்றால் என்ன?
28. பசுமை சந்தையிடுதல் என்றால் என்ன?
29. தகவல் பெறும் உரிமை பற்றி சிறுகுறிப்பு வரைக.
30. வணிக நிறுவனங்கள் தங்களுக்கு தேவைப்படும் பணியாளர்களை கல்வி நிறுவனங்களில் தேர்ந்தெடுக்கும் முறை எது?

பகுதி - இ

III. ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40-க்கு கட்டாயம் விடையளிகவும்.(7 X 3 = 21)

31. மேலாண்மையை நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்துக.
32. கருவூல இரசீதின் வகைகளை விவரி.
33. காளை மற்றும் கரடி - விளக்குக
34. வேலைவாய்ப்பு இணையதளங்கள் என்றால் என்ன?
35. சந்தையிடுகையின் நோக்கங்கள் யாவை?
36. தனியிடச்சந்தை பற்றி விளக்குக
37. செயற்கை பற்றாக்குறை என்றால் என்ன?
38. மாநில ஆணையத்தின் உறுப்பினர்கள் யார்?
39. புறத்தோற்றமற்ற பத்திரங்கள் என்றால் என்ன?
40. திரு. விஜய் அவர்கள் பங்குச் சந்தையில் பங்குகளில் முதலீடு செய்ய விரும்புகிறார். ஆனால் அவருடைய விருப்பம் என்னவெனில் பங்குகளின் விலை எதிர்காலத்தில் குறைந்தால் மறுவிற்பனைக்கு சுலபமாக இருக்கும் என நினைக்கிறார். அவர் எந்த வகையான ஊக வணிகர்? சிறு விளக்கம் தருக.

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: (7 X 5 = 35)

41. (அ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் 5) [அல்லது]
(ஆ) பல்வேறு வகையான சோதனைகள் சுருக்கமாக விளக்குக. (ஏதேனும் 5)
42. (அ) பங்குச் சந்தை - பொருட்கள் பரிமாற்றகச் சந்தை வேறுபாடு தருக. (ஏதேனும் 5) [அல்லது]
(ஆ) சந்தயிடுகை கலவையின் கூறுகளை குறிப்பிடுக.
43. (அ) நுகர்வோரின் கடமைகளை விளக்குக. (ஏதேனும் 5) [அல்லது]
(ஆ) அரசுப் பத்திரங்களின் இயல்புகளைக் கூறுக. (ஏதேனும் 5)
44. (அ) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள அக வளங்களை விளக்குக. [அல்லது]
(ஆ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்.
45. (அ) தேசிய ஆணையத்தின் ஒட்டுமொத்த பணிகளை விவரிக்கவும். [அல்லது]
(ஆ) விதிவிலக்கு மேலாண்மையின் நன்மைகள் என்ன?
46. (அ) மனித வளங்களின் இயல்புகள் யாவை? [அல்லது]
(ஆ) பயிற்சியின் நன்மைகளை விளக்குக.
47. (அ) பாரம்பரிய சந்தையிடுகை எவ்வாறு மின் சந்தையிலிருந்து வேறுபடுகிறது?
[அல்லது] (ஆ) செபியின் அதிகாரங்களை விவரி? (ஏதேனும் 5). QL-12-COM-P-2